## APPENDIX I

### Thurstone Attitude Towards Employment Scale

கீழே சில மனப்பான்மை பற்றிய வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியமும் எந்த அளவிற்கு நீங்கள் வேலைக்கு சேர்வதில் ஆர்வம் கொண்டுள்ளீர்கள் என்பதைத் தெரிவிப்பதாக இருக்கிறது. ஒவ்வொரு வாக்கியத்தையும் கவனமாகப் படியுங்கள். கொடுக்கப்பட்டுள்ள ஒரு வாக்கியம் உங்கள் மனநிலையைப் பிரதிபலிப்பதாக இருந்தால், அதன் எதிரில் "சரி" என்ற இடத்தில் (✓) குறியிடவும். கொடுக்கப்பட்ட ஒரு வாக்கியம் உங்கள் மனநிலையைப் பிரதிபலிக்காததாக இருந்தால், அதன் எதிரில் "இல்லை" என்ற இடத்தில் (✓) குறியிடவும். கீழ்க்காணும் வாக்கியங்களை ஒவ்வொன்றாகப் படித்து மேற்கூறிய படி விடை அளியுங்கள். இதில் சரியான விடை என்றோ தவறான விடை என்றோ எதுவுமில்லை. உங்கள் மனநிலையை எவ்விதத் தயக்கமுமில்லாமல் வெளியிடவும்.

| .No. | Item No. | | |
|---|---|---|---|
| 1. | 22 | வேலையில்லாதவர்கள் ஒன்று சேர்ந்து போராட்டம் செய்தால் நானும் அதில் கலந்து கொள்வேன். | சரி/இல்லை |
| 2. | 50 | வேலையில்லாமல் நீடிப்பதை என்னால் நினைத்து கூட பார்க்க முடியவில்லை. | சரி/இல்லை |
| 3. | 2 | வேலை கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி வாழ்க்கை ஓடிக்கொண்டுதான் இருக்கும். | சரி/இல்லை |
| 4. | 28 | வேலை தரும் கௌரவத்திற்காகவே வேலை தேடுகிறேன். | சரி/இல்லை |
| 5. | 53 | எனக்கு வேலை வேண்டும் என்றாலும் அது கிடைக்காவிட்டாலும் கூட என்னால் சமாளித்துக்கொள்ள முடியும். | சரி/இல்லை |
| 6. | 18 | வேலை கிடைக்கிறதே என்று ஊரை விட்டு போக முடியாது. | சரி/இல்லை |
| 7. | 16 | வேலையில்லாததால் என் வாழ்க்கையில் இருள் சூழ்ந்துவிட்டது. | சரி/இல்லை |
| 8. | 1 | வேலை கிடைக்காததால் பல முறை கண்ணீர் விட்டு அழுது இருக்கிறேன். | சரி/இல்லை |
| 9. | 6 | ஏதோ பெற்றோர்கள் சொல்கிறார்களே என்று வேலை தேடுகிறேனே தவிர என்னைப்பொறுத்தவரை எனக்கு வேலையில் சேர்ந்தே தீரவேண்டும் என்றில்லை. | சரி/இல்லை |

Contd..

| S.No. | Item No. | | |
|---|---|---|---|
| 10. | 3 | வேலையில்லாதவன் சமுதாயத்தில் செல்வாக்கு அற்றவனாகக் கருதப்படுவான். | சரி/இல்லை |
| 11. | 8 | எனக்கு வேலை கிடைக்காவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்ள நேரிடும். | சரி/இல்லை |
| 12. | 9 | காலத்தின் கட்டாயத்தால்தான் வேலை தேடுகிறேன், இல்லையென்றால் வேலை இல்லாமல் மகிழ்ச்சியாகவே இருப்பேன். | சரி/இல்லை |
| 13. | 5 | வேலையின்மைக்கு காரணமான அரசின் கழுத்தை நெறிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். | சரி/இல்லை |
| 14. | 13 | இன்று வெளியூரில் கிடைக்கும் வேலையை விட நாளை உள்ளூரில்கிடைக்கும் வேலையே சிறந்தது. | சரி/இல்லை |
| 15. | 4 | வேலையின்மையால் என் வாழ்க்கை சூன்யமாய் கிடக்கிறது. | சரி/இல்லை |
| 16. | 25 | வேலையில்லாதவன் என்று கேலி செய்தால் அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். | சரி/இல்லை |
| 17. | 20 | எனக்கு வேலை கிடைத்தால் நன்றாக இருக்கும். | சரி/இல்லை |
| 18. | 38 | வேலைகிடைக்கிறதே என்று அவசரப்பட்டு ஓடுவது சரியல்ல. | சரி/இல்லை |
| 19. | 51 | எல்லோரும் வேலை பார்த்தே தீரவேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. | சரி/இல்லை |
| 20. | 26 | வேலையில்லாததினால் ஏன் வாழ்கிறோம் என்று அடிக்கடி கவலைப்படுகிறேன். | சரி/இல்லை |